| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **06/04/2024** | முதல் | **10/04/2024** |
| அறிக்கை எண் : | **028/ 2024** | வெளியீட்டு நாள் : | | **05/04/2024** | |

### திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (31.03.2024 **முதல்** 04.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 10-04-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31/03 | 01/04 | 02/04 | 03/04 | 04/04 | தேதி | நாள்-1 06/04 | நாள்-2 07/04 | நாள்-3 08/04 | நாள்-4 09/04 | நாள்-5 10/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 39 | 39 | 39 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 39 | 38 | 38 | 39 |
| 25 | 27 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 26 | 27 | 27 |
| 2 | 4 | 3 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 3 | 4 | 0 | 3 |
| 63 | 65 | 63 | 73 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 80 |
| 35 | 42 | 39 | 38 | 41 | | 20 | 20 | 20 | 30 | 30 |
| 5 | 12 | 12 | 7 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 10 | 10 | 10 |
| தென் மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

### குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (05 முதல் 18 ஏப்ரல் 2024):**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் பொதுவாக குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட அதிகரித்து காணப்படும். 38° செல்சியஸ் முதல் 40° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட சற்று குறைவாக காணப்படும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது சற்று அதிகரித்து காணப்படும்.20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது சற்று குறைவாக காணப்படும்.20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு (06.04.2024 முதல் 09.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : பப்பாளி, ரோஜா, கால்நடை.**

**பப்பாளி:**

பப்பாளி பழப் பயிரில் வெள்ளை ஈ தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வெள்ளை ஈதாக்குதலின் காரணமாக இவற்றின் இளம் பூச்சிகள் மற்றும் வண்டுகள் இலையின் அடிப்புறத்திலிருந்து சாற்றை உறிஞ்சும் மேலும் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும்.
இதனைக் கட்டுப்படுத்த செடியின் உயரத்திற்கேற்ப ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி அட்டையினை கட்டி விடவும்.

மேலும் 250 கிராம் பச்சைமிளகாய்> 250 கிராம் பூண்டு மற்றும் 100 கிராம் இஞ்சி ஆகியவற்றை நன்கு அரைத்து அதனை மூன்று லிட்டர் தண்ணீரில் நன்கு கலந்து இரவு முழுவதும் ஊறவைத்து (3ஜி) கரைசல் தயாரிக்கவும்.

இந்த கரைசலில் இருந்து 300 மில்லி எடுத்து அதனுடன் 40 கிராம் சூடோமோனாஸ்> 20 மில்லி கோழி முட்டையின் வெள்ளைக்கரு இவற்றுடன் 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

**ரோஜா:**

ரோஜா மலர் பயிரில் சிவப்பு செதில் பூச்சிகளின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இப்பூச்சிகள் செடிகளில் சாற்றை உறிஞ்சுவதால் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இதனைக் கட்டுப்படுத்த நோய் தாக்கிய கிளைகளை அகற்றி எரித்து விட வேண்டும். செதில் பூச்சி கூட்டமாகக் காணப்படும் தண்டுப் பகுதியை டீசல் அல்லது மண்ணெண்ணெயில் முக்கிய பஞ்சினால் துடைத்து விட வேண்டும்.

கவாத்து செய்யும் போது மற்றும் ஏப்ரல் மாதத்தில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 25 கிராம் என்ற அளவில் மீன் எண்ணெய் ரெசின் சோப் கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

நிலவும் அதிகரித்த உயர் வெப்பநிலையை கருத்திற் கொண்டு தங்களது கால்நடைகளுக்கு தமிழ்நாடு கால்நடை பல்கலைக் கழத்தின் தானுவாஸ் தாதுக் கலவையினை ஒரு நாளைக்கு ஒரு கால்நடைக்கு 50 கிராம் என்ற அளவில் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

மேலும் இவ்வெப்பக் காலத்தினை தாங்கும் பொருட்டு கால்நடைகளுக்கு தேவையான அளவு சுத்தமான தண்ணீரைக் கொடுக்கவும்.